**வெலிகந்த பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 17 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 03 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஜூன் 29 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து வெலிகந்த பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016 மே 20 திகதி சரசவி சங்ஹிந்த கலை விழாவிற்காக கிடைத்திருந்த ரூபா 200,000 இற்கான மீண்டுவரும் வருமானம் ஒன்றினை மூலதன வருமானம் ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண சபை பன்முகப்படுத்தப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 215,000 இற்கான மூலதனச் செலவுகள் வழங்கல்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மீண்டுவரும் செலவு ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 446,440 இற்கான மூலதனச்செலவினத்தை மூலதனச் சொத்துக்களின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பின் கீழ் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உள்ளூராட்சி வீதிகள் வாரத்திற்காக வட மத்திய மாகாண முதலமைச்சில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,499,528 இற்கான தொகை கடன்பட்டோரிடமிருந்து மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 1,257,211 இற்கான தொகை கடன்கொடுத்தோர்களிடமிருந்து கைவிடப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

05 கணக்கு விடயங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட பதிவேடுகள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் இடையே ரூபா 248,148 இற்கான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10 வருடங்களை விட மிகையான காலம் முதல் நிதிக்கூற்றுக்களில் தொடர்ச்சியாக வெளிப்படுத்தப்பட்டு வரும் திம்புலாகல பிரதேச சபையில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 32,049 இற்கான பதவியணிக்கடன் வட்டி மற்றும் ரூபா 1,000,000 இற்கான நீதிமன்றத் தண்டப்பணத்தை தீர்த்திருக்கவில்லை.

(ஆ) 11 வருட காலம் முதல் கணக்குகளில் காட்டப்பட்டுவரும் செலவுக் கடன்கொடுத்தோர் ரூபா 468,474 தொகையினை தீர்த்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூலச் சான்றுகள் இன்மை**

நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 279,732,485 இற்கான 08 கணக்கு விடயங்கள் தொடர்பாக உரிமையை உறுதிப்படுத்தும் கடிதம், கணிப்பீட்டு சபை அறிக்கை, விரிவான அட்டவணை மற்றும் வருமானப் பதிவேடுகள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள்விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

பின்வரும் சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்விதிகள், பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை | |
| (i) விதி இலக்கம் 21 | பணம் கிடைத்தவுடன் பணம் செலுத்திய நபருக்கு பற்றுச்சீட்டு ஒன்று வழங்கப்பட வேண்டுமெனினும் வெலிகந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பொறுப்பதிகாரியினால் நீர் வழங்குதல் தொடர்பாக கிடைக்கும் பணத்திற்காக பற்றுச்சீட்டுகள் வழங்கியிருக்கவில்லை. |
| (ii) விதி இலக்கம் 59 முதல் 63 வரை | கைத்தொழில்கள், வியாபாரங்கள் மற்றும் திறந்தொழில்கள் தொடர்பான பட்டியல் ஒன்று தயாரித்து வருடத்தின் மார்ச் 31 திகதி அல்லது அதற்கு முன்னர் சபையின் செயலாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | (iii) விதி இலக்கம் 67 | ஆண்டுதோரும் செய்யப்பட வேண்டிய கணிப்பீடு ஒன்றின் மூலம் வியாபாரங்கள் மற்றும் திறந்தொழில்களின் தொகையில் அதிகரித்தல் குறைதல்களை அடங்கிய பட்டியல் ஒன்று தயாரித்திருக்காமையால் அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அனைத்து வியாபார நிலையங்கள் மற்றும் திறந்தொழில் நிலையங்களில் இருந்து அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டது என உறுதிப்படுத்தப்படவில்லை. |
| | (iv) விதி இலக்கம் 180 | பணம், வருமானம் ஆகியவை தொடர்பாக நிருவாக ரீதியாக பொறுப்புச் சொல்ல வேண்டிய அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை கட்டளைச் சட்டத்திற்கு இணங்க பிணை வைக்க வேண்டும். எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை. |
| | (v) விதி இலக்கம் 203 | சபையின் ஆதனங்கள் தொடர்பாக முழுமையான கணிப்பீடு ஒன்று 2009 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை நடத்தியிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வடமத்திய மாகாண சபையின் நிதி விதிக் கோவை<br>------------------------------------------------------- | |
| | விதி இலக்கம் 261.2.2 | விதிக்கு முரணாக மீளாய்வாண்டின் போது பெற்றிருந்த ரூபா 134,000 இற்கான முற்பணத்தை தீர்ப்பதற்காக 01 மாதம் முதல் 9½ மாதம் வரை கால தாமதம் அடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டது. |
| (இ) | சுற்றறிக்கைகள் மற்றும் சுற்று நிருபங்கள்<br>------------------------------------------------------- | |
| | 2015 திசெம்பர் 04 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் என்ஸீபீ/எல்ஜீ/ஏசீ/4/1/2ஆம் இலக்க கடிதம் | தலைவருக்காக ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 2015 திசெம்பர் மாதம் முதல் ஒரு மாதத்திற்கு 150 லீட்டர்கள் எரிபொருள் வரையறைக்கு உட்பட செயலாளர்களினால் பயன்படுத்த முடியுமாக இருந்த போதிலும் அதற்கு முரணாக மீளாய்வாண்டின் போது அவ்வாகனத்திற்காக ரூபா 346,655 தொகை பெறுமதியான 3649 லீட்டர்களுக்காக மிகையாக செலவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் படி, 2016 திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 4,135,860 ஆகக் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 1,120,053 தொகையாகும்.

### 2.2 வருமானம் நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடி யான வருமானம் | திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) | கேள்வி குத்தகை | 9,615,000 | 2,825,500 | 525,715 |
| (ii) | குத்தகை | 1,554,900 | 206,829 | 1,473,404 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,075,000 | 421,125 | 654,800 |
| (iv) | நீதிமன்றத் தண்டப் பணம் | 5,400,000 | 3,902,417 | 4,367,899 |

#### 2.2.2 கேள்வி மூலம் குத்தகை

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை கேள்வி குத்தகைத் தொகை ரூபா 525,715 தொகையில் இருந்து எத் தொகையையேனும் ஆண்டின் போது சேகரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 குத்தகை

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை குத்தகை வருமானம் ரூபா 1,394,536 தொகையில் இருந்து ஆண்டின் போது சேகரித்திருந்தது ரூபா 638,303 எனப்படும் 45 சதவீதம் மாத்திரமே.

#### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

வருட ஆரம்பத்தில் காணப்பட்ட நிலுவை வர்த்தக அனுமதிப்பத்திர வருமானம் ரூபா 655,300 தொகையில் இருந்து ரூபா 500 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) உரிய பதவிகளில் கடமைகள் சாட்டுதல் செய்யப்படாமல் 2016 ஜூலை மாதம் வரை அலுவலக கடமைகளில் ஈடுபடுத்தியிருந்த பாதைத்தொழிலாளர் இருவர் மற்றும் வேலை பரிசோதகர் ஒருவர் 2016 ஆகஸ்ட் முதல் பாதை தொழிலாளர்கள் இருவரும் நூலகத்திற்கும் வேலைப் பரிசோதகர் வெளிக்கள கடமைகளுக்கும் இணைக்கப்பட்டிருந்தனர்.

(ஆ) பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த வீதி விளக்குகள் தொடர்பாக விபரங்கள் அடங்கிய பதிவேடு ஒன்று சபையினால் பேணப்பட்டிருக்காமையால் சபைக்குச் சொந்தமான வீதி விளக்குகளில் எண்ணிக்கை எத்தனை என உறுதிப்படுத்துவதற்கு அல்லது பழுதுபார்த்தல் வேலைகள் மேற்கொள்ளும் போது அப்பழுதுபார்த்தல் வேலை மேற்கொள்ளப்பட்டது எந்த வீதி விளக்கிற்கு என இனங்காணப்பதற்கு முடியாதிருந்தது.

(இ) 2008 ஆண்டு முதல் பதில் கடமையாற்றும் வருமான நிருவாகி என கடமையாற்றும் ஆரம்ப நிலையைச் சேர்ந்த சுகாதார தொழிலாளர் உத்தியோகத்தவர் ஒருவர் ரூபா 460,660 இனை அண்மித்த தொகை ஒன்றினை மோசடி செய்யப்பட்ட விடயங்கள் தெரிந்திருந்த போதிலும் அது தொடர் முறையான பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் இப் பதவிக்காக மீண்டும் ஆரம்ப நிலையைச் சேர்ந்த உத்தியோகத்தர் ஒருவர் 2017 ஜனவரி 31 திகதி முதல் நியமனம் செய்யப்பட்டிருந்தார்.

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

(அ) இரண்டு நீர் பவுசர்கள் மற்றும் பெக்கோ இயந்திரம் ஒன்றினை சேவையில் ஈடுபடுத்துவதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை இனங்காண்பதற்காக வருமான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தனியார் நிறுவனமொன்றிற்கு ஒப்பந்த வேலை அடிப்படையில் வழங்கியிருந்த தற்போது நிர்மாணிக்கப்பட்டு வரும் புதிய பிரதேச சபைக் கட்டிடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு தேவையான நீர், பிரதேச சபைக்குச் சொந்தமான நீர் பவுசர் மூலம் அறவீடுகள் ஏதும் மேற்கொள்ளப்படாமல் வழங்கப்பட்டு காணப்பட்டது.

(இ) சபையின் பெண் செயலாளரினால் பயன்படுத்தப்படும் கப் வண்டியினை இரவு நேரங்களில் பிரதேச சபை வளவில் நிறுத்தி வைக்கப்படாமல் தமன்கடுவ பிரதேச சபை வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாக வெளிப்படுத்தப்பட்ட போதிலும் அது தொடர்பாக எச் சந்தர்ப்பத்திலும் ஓட்ட அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

2014 திசெம்பர் மாதத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களத்தில் இருந்து பிரதேச சபைக்கு வழங்கியிருந்த 368 கல்வணய்ஸ் கொடித் தூண்களில் ரூபா 239,142 தொகை பெறுமதியான 210 கொடித்தூண்கள் காணாமல் போயிருந்த போதிலும் இது தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்களிடம் குறிப்பிட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 ஏப்ரல் மற்றும் 2009 பெப்ரவரி மாதங்களின் போது வட மத்திய மாகாண முதலமைச்சில் இருந்து வழங்கியிரந்த ரூபா 613,500 பெறுமதியான அரிசி மா மற்றும் அரிசியுடன் சேர்ந்த உற்பத்திகள் மேற்கொள்ளும் உபகரணங்கள் 2017 மார்ச் 31 திகதி வரை 8 வருடங்களை மிகைத்த காலம் பயன்படுத்தப்படாமல் துருப்பிடிக்கக் கூடிய நிலையில் காணப்பட்டது.

(ஆ) பிரதேச சபைக்குச் சொந்தமான 3 வாகனங்கள் முறையே 6 மாதம் முதல் 3 வருடங்கள் வரையான காலம் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(இ) இலங்கை மகாவலி அதிகார சபையினால் 2009 ஆண்டின் போது வழங்கியிருந்த 56 குழாய் கிணற்று உபகரண முறைமைகள் 7 வருடத்தை விட மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் குவிக்கப்பட்டு காணப்பட்டது.

**3.5 ஒப்பந்த நிருவாகம்**

2016 கிராமியப் பாதைகள் அபிவிருத்தி வார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்தி முன்னேற்றப்பட்ட பாதைகளுக்காக வரைபுகள் மற்றும் மதிப்பீடு தயாரித்திருக்காததுடன் அபிவிருத்தி செய்யப்பட்ட பாதைகளின் பெயர்கள் மற்றும் அவற்றின் தூரத்தின் அளவு என்பன வெவ்வேறாக சமர்ப்பிக்கப்படவில்லை.

**3.6 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 ஆண்டின் போது சுமார் ரூபா 750,000 செலவிடப்பட்டு திண்மக் கழிவுப்பொருள் செயற்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக வெலிகந்த சந்தை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடம் 9 வருடங்களை விட மிகையான காலம் விளைவற்றுக் காணப்பட்டது. தற்போது இக்கட்டிடத்தின் சில கொங்கிரீட் தூண்கள் மற்றும் சில சுவர் பகுதிகள் மாத்திரமே மீதியாக காணப்படுவதாக 2017 மார்ச் 31 ஆம் திகதிய பௌதீகப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) பிரதேச சபையினால் முறையான திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டமொன்று செயற்படுவதற்கு பதிலாக இலங்கை மகாவலி அதிகார சபையினால் சேனபுர பிரதேசத்தில் வழங்கியிருந்த சுமார் 5 ஏக்கர் அளவான காணியில் குப்பைகள் போடப்படுகின்றன. இந்தக காணி வெலிகந்த நகருக்கு அண்மித்த மட்டக்களப்பு பிரதான பாதைக்கு அண்மையில் காணப்படுவதினால் முறைசாரா விதமாக குப்பைகள் போடுவதினால் எதிர்காலத்தில் சுற்றாடல் சிக்கல் ஏற்படக் கூடும் என அவதானிக்கப்பட்டது.

**3.7 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 ஆகஸ்ட் 01 திகதி முதல் வெற்றிடமாகக் காணப்படும் செயலாளர் பதவிக்கு நிலையான உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்காததுடன் 2016 மே 19 வரை கடமைகளை மேற்கொள்வதற்காக விசாரணை உத்தியோகத்தர் ஒருவரும் 2016 மே 20 திகதி முதல் கடமைகளை மேற்கொள்வதற்காக முகாமைத்துவ உதவிச்

சேவை தரம் 1 ஐச் சேர்ந்த பெண் உத்தியோகத்தர் ஒருவரும் நியமனம் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2011 நவம்பர் 01 திகதி முதல் அமைய அடிப்படையில் பெண் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவர் சேர்க்கப்பட்டிருந்த 2014 அக்தோபர் 24 ஆம் திகதி முதல் பாதைத் தொழிலாளர் பதவியில் நிரந்தரப்படுத்தப்பட்டிருந்த பெண் உத்தியோகத்தர் ஒருவர் 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் தொழிநுட்ப உத்தியோகத்தர் பதவியில் பதில் கடமையாற்றியிருந்ததுடன், அலுவலக உதவியாளர் ஒருவர் மற்றும் சுகாதார தொழிலாளர் ஒருவர் வருமான நிருவாகி பதவிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

(இ) மீளாய்வாண்டு இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 10 பதவிகளில் வெற்றிடமும் மற்றும் 13 பதவிகளில் மிகையும் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) வருமான நிருவாகம்
(ஆ) உத்தியோகத்தர்களுக்கு கடமை அதிகாரங்கள் சாட்டப்படல்
(இ) கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு
(ஈ) களஞ்சியக் கட்டுப்பாடு
(உ) உள்ளகக் கணக்காய்வு
(ஊ) வாகனக் கட்டுப்பாடு